www.Padasalai.Net www.TrbTnpsc.com

# இரண்டாம் இடைத்தேர்வு - 2024

வகுப்பு : **12**

## கணக்குப்பதிவியல்

பதிவு எண் :

காலம் : 1.30 மணி

மொத்த மதிப்பெண்கள் : **50**

**பிரிவு-1**

**குறிப்பு -** (i) **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
(ii) **கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**சரியான விடையினை தேர்ந்தெடுக்கவும்.** **10x1=10**

1. நிறுமக் கலைப்பின்போது மட்டுமே அழைக்கப்படக் கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும்
   அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆ) அழைக்கப்பட்ட முதல்
   இ) முதலினக் காப்பு ஈ) காப்பு முதல்
2. ஒறுப்பிழப்பு செய்யும் போது பங்கு முதல் கணக்கு எதில் பற்று வைக்கப்படுகிறது
   அ) முக மதிப்பு ஆ) பெயரளவு மதிப்பு
   இ) செலுத்தப்பட்ட தொகை ஈ) அழைக்கப்பட்ட தொகை
3. சொத்துக்களை வாங்கி பங்குகள் வெளியிடும் போது வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) விற்பனையாளர் கணக்கு ஆ) பற்பல சொத்துகள் கணக்கு
   இ) பங்கு முதல் கணக்கு ஈ) வங்கி கணக்கு
4. சரியான குறியீட்டைப் பயன்படுத்தி பொருத்தமான இணையை தேர்ந்தெடுக்கவும்
   (A) குறை ஒப்பம் – (i) முன்கூட்டிச் செலுத்திய அழைப்பு பணம்
   (B) மிகை ஒப்பம் – (ii) வெளியிட்ட பங்குகளை விட அதிகமாக ஒப்பப்பட்டது.
   (C)அழைப்பு நிலுவை – (iii) வெளியிட்ட பங்குகளை விட குறைவாக ஒப்பப்பட்டது
   (D)அழைப்பு முன் பணம் – (vi) செலுத்தப் பெறாத அழைப்பு பணம்

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| அ) | (i) | (ii) | (iii) | (iv) |
| ஆ) | (iv) | (iii) | (ii) | (i) |
| இ) | (iii) | (ii) | (iv) | (i) |
| ஈ) | (iii) | (iv) | (i) | (ii) |

5. 8 செலுத்தப்பட்ட ₹ 10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்தளவு மறு வெளியீட்டு விலை
   அ) பங்கு ஒன்றுக்கு ₹ 10 ஆ) பங்கு ஒன்றுக்கு ₹ 8 இ) பங்கு ஒன்றுக்கு ₹ 5 ஈ) பங்கு ஒன்றுக்கு ₹ 2
6. நிதி நிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது
   அ) பணம் சாரா தகவல்கள் ஆ) கடந்த கால தகவல்கள்
   இ) குறகிய கால தகவல்கள் ஈ) நீண்ட கால தகவல்கள்
7. நிதி என்னும் சொல் குறிப்பிடுவது
   அ) நடப்புப் பொறுப்புகள் அ) நடைமுறை முதல்
   இ) நிலைச் சொத்துகள் ஈ) நீண்ட காலச் சொத்துகள்
8. ஒரு வரையறு நிறுமத்தின் விற்பனை ₹1,25,000 லிருந்து ₹1,50,000க்கு அதிகரித்துள்ளது. இது ஒப்பீட்டு வருமான அறிக்கையில் எவ்வாறு தோன்றுகிறது ?
   அ) +20% ஆ) +120% இ) -120% ஈ) -20%



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

9. ஒரு வணிகத்தின் முதலாம் ஆண்டுச் செலவுகள் ₹ 80,000 இரண்டாம் ஆண்டில் செலவுகள் ₹ 88,000 ஆக அதிகரித்திருந்தது. இரண்டாம் ஆண்டின் போக்கு விகிதம் என்ன ?

அ) 10% ஆ) 110% இ) 90% ஈ) 11%

10. ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கும் தொடர்பினை கணிதவியல் முறையில் கூறுவது

அ) முடிவு ஆ) விகிதம் இ) மாதிரி ஈ) தீர்மானம்

**பிரிவு-II**

**குறிப்பு - எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**அவற்றில் வினா எண் 16க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** **5x2=10**

11. பத்திர முனைமக் கணக்கு பற்றி சிறுகுறிப்பு வரையவும்.
12. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளைப் பட்டியலிடவும்.
13. சாரா நிறுமம் பங்கொன்று ₹10 வீதம் ₹10,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்தின் போது முழுத்தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. பங்கொன்று ₹ 2 முனைமத்தில் வெளியிடுகிறது. இதற்கான குறிப்பேட்டு பதிவுகளை தருக.
14. முத்து என்பவர் ₹10 மதிப்புள்ள 20 சாதாரண பங்குகளை வைத்திருந்தார். அவர் அதன் விண்ணப்பத் தொகையாக ₹ 2 செலுத்திய நிலையில் ஒதுக்கீட்டுப் பணம் ₹3 மற்றும் முதல் அழைப்பு பணம் ₹ 1செலுத்த வில்லை. முதன் அழைப்புக்கு பின்னர் இயக்குநர்கள் அப்பங்குகளை ஒறுப்பிழப்பு செய்ய முடிவு செய்தனர். பங்கு ஒறுப்பிழப்பிற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.
15. பின்வரும் தகவல்களிலிருந்து நடப்பு விகிதத்தைக் கண்டறியவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| குறுகிய கால முதலீடுகள் | 80,000 | வணிகக் கடனீந்தோர் | 1,60,000 |
| சரக்கிருப்பு | 1,60,000 | செலுத்துதற்குரிய மா/சீ | 1,00,000 |
| கணக்குகள் மூலம்பெற வேண்டியவைகள் | 4,00,000 | கொடுபட வேண்டிய செலவுகள் | 1,40,000 |
| கரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள் | 1,20,000 | முன்கூட்டிசெலுத்திய செலவுகள் | 40,000 |

16. பின்வரும் தகவல்களிலிருந்து தருண்& கோ நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கை தயார்செய்யவும்.

| விவரம் | 2016-2017 ₹ | 2017-2018 ₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 2,00,000 | 2,50,000 |
| இதர வருமானம் | 50,000 | 40,000 |
| செலவுகள் | 1,50,000 | 1,20,000 |

**பிரிவு-III**

**குறிப்பு - எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**அவற்றில் வினா எண்.22க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** **5x3=15**

17. சிறு குறிப்பு வரைக. (அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் (ஆ) காப்பு முதல்
18. ஒப்பீட்டு அறிக்கை தயாரிப்பில் உள்ள படிநிலைகளை விளக்கவும்.
19. கௌதம் வரையறு நிறுமம், இராகவ் அவர்களி ₹10 மதிப்பிலான 500 நேர்மைப் பங்குகளின் இறுதி அழைப்பு ₹2 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்தது. ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள், மதன் என்பவருக்கு பங்கு ஒன்று ₹8 வீதம் மறு வெளியீடு செய்யப்பட்டது. ஒறுப்பிழப்பு மற்றும் மறு வெளியீட்டிற்கான குறிப்பேட்டு பதிவுகளைத் தரவும்.
20. ராஜன் நிறுமம் 6,00,000 மதிப்புள்ள இயந்திரத்தை ஜெகன் நிறுவனத்திடமிருந்து வாங்கியது. அது பங்கொன்று 10 மதிப்புள்ள முற்றிலும் செலுத்தப்பட்ட நேர்மைப்பங்குகளை அவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைக்காக வழங்கியது. கீழ்க்கண்ட நிலைகளில்பதியவேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்

(ii) பங்குகளை 50% முனைமத்தில் வெளியிட்டால்

21. பின்வரும் தகவல்களிலிருந்து கலா நிறுமத்தின் போக்குசதவீதங்களை கணக்கிடுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| விவரம் | ₹ ஆயிரம் | | |
|---|---|---|---|
| | ₹ 2015-16 | ₹ 2016-17 | ₹ 2017-18 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 400 | 500 | 600 |
| இதர வருமானம் | 100 | 150 | 200 |
| செலவுகள் | 200 | 290 | 350 |

22. பின்வரும் விவரங்களைக் கொண்டு சிவா வரையறு நிறுமத்தின் மார்ச்–31, 2016 மற்றும் மார்ச்–31, 2017க்கான பொது அளவு வருவாய் அறிக்கையினை தயார் செய்யவும்.

| விவரம் | 2015-2016 ₹ | 2016-2017 ₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 2,00,000 | 3,00,000 |
| இதர வருமானம் | 25,000 | 75,000 |
| செலவுகள் | 2,50,000 | 1,50,000 |
| வருமான வரி | 40 % | 40 % |

**பிரிவு-IV**

**குறிப்பு - அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3x5=15**

23. (அ) சரண்யா வரையறு நிறுமம் பங்கு ஒன்றின் மதிப்பு ₹10 வீதம், 20,000 நேர்மைப் பங்குகளை முகமதிப்பில் பொதுமக்களுக்கு வெளியிட்டது. பங்குகளுக்கானத் தொகை கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பத்தின் போது ₹3

ஒதுக்கீட்டின் போது ₹4

முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹3

30,000 பங்குகளுக்கான தொகைவிண்ணப்பத்தின் போது பெறப்பட்டது. கூடதலான விண்ணப்பத் தொகை திருப்பி, உடனடியாக அனுப்பப்பட்டது. இதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்

**(அல்லது)**

ஆ. மகேஷ் நிறுமத்தின் 2019, மார்ச்–31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு

| விவரம் | ₹ |
|---|---|
| I. பங்குமூலதனம் மற்றும் பொறுப்புகள் | |
| 1. பங்குதாரர் நிதி | |
| நேர்மைப் பங்கு முதல் | 2,00,000 |
| 2. நீண்ட காலப் பொறுப்புகள் | |
| நீண்ட கால கடன்கள் | 50,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள் | |
| (அ) குறகிய கால கடன்கள் | 17,000 |
| (ஆ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 25,000 |
| (இ) இதர நடப்புப் பொறுப்புகள் கொடுபட வேண்டிய செலவுகள் | 3,000 |
| (ஈ) குறுகிய கால ஒதுக்குகள் | 5,000 |
| மொத்தம் | 3,00,000 |
| II. சொத்துகள் | |
| 1. நீண்ட காலச் சொத்துகள் | |
| (அ) நிலைச் சொத்துகள் புலனாகும் சொத்துகள் | 1,50,000 |
| 2. நடப்பு சொத்துகள் | |
| (அ) சரக்கிருப்பு | 45,000 |
| (ஆ) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் | 70,000 |
| (இ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் | 30,000 |
| (ஈ) இதர நடப்புச் சொத்துகள் செலவுள் முன்கூட்டிச் செலுத்தியது | 5,000 |
| மொத்தம் | 3,00,000 |



Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

(அ) நடப்பு விகிதம் ( ஆ ) நீர்மை விகிதம் கணக்கிடவும்.

24. (அ) ராணி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து பொது அளவு நிதி நிலை அறிக்கையினைத் தயார் செய்யவும்.

| விபரம் | 31st March-2016 | 31st March-2017 |
|---|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | |
| பங்குதாரர் நிதி | 5,40,000 | 6,00,000 |
| நீண்ட கால பொறுப்புகள் | 2,70,000 | 2,50,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 90,000 | 1,50,000 |
| மொத்தம் | 9,00,000 | 10,00,000 |
| II. சொத்துகள் | | |
| நீண்ட காலச் சொத்துகள் | 7,20,000 | 8,00,000 |
| நடப்பு சொத்துகள் | 1,80,000 | 2,00,000 |
| மொத்தம் | 9,00,000 | 10,00,000 |

**(அல்லது)**

(ஆ) டேனியல் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பிட்டு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.

| விவரம் | 2015-2016 ₹ | ₹ 2016-2017 |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 40,000 | 50,000 |
| இயக்கச் செலவுகள் | 25,000 | 27,500 |
| வருமான வரி (வரிக்கு முன்னர் உள்ள) இலாபத்தில் | 30 | 30 |

25. (அ) குமார் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து போக்கு சதவீதங்களைக் கணக்கிடுக.

| விவரம் | ₹ ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | ₹ 2015-16 | ₹ 2016-17 | ₹ 2017-18 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 300 | 270 | 150 |
| இதர வருமானம் | 50 | 80 | 60 |
| செலவுகள் | 250 | 200 | 125 |
| வருமான வரி % | 40 | 40 | 40 |

**(அல்லது)**

(ஆ) ஷெரோ ஹெல்த் கேர் நிறுமம் ஒன்று ₹ 10 மதிப்புள் ₹ 3,00,000 நேர்மைப் பங்குகளை பங்கொன்றுக்கு ₹2 வீதம் முனைமத்தில் வெளியிட விண்ணப்பங்களைச் கோரியது.

விண்ணப்பத்தின் போது ₹3

ஒதுக்கீட்டின் போது ₹5 ( முனைமம் உட்பட)

முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹4

மிகை ஒப்பம் உள்ள நிலையில் ₹ 4,00,00 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

மிகுதியாகப் பெற்ற விண்ணப்பங்கள் இயக்குநர்களால் நிராகரிக்கப்பட்டன. அனைத்துத் தொகைகளும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com